# ஜனவிநோதினி.

இல. 12. டிசெம்பர்மீ 1871. புஸ்த. II.

## அர்த்தசாஸ்திரம்.

நான்காவது: பொன் வெள்ளி நாணயங்கள்போலவே கடுதாசி நாணயமும் பண்டமாற்றுக்கு அநுகூலமென்பது.

*முதலாவது (Bank) பாங்க் என்னப்படுகிற உண்டிவர்த்தக சாலையின் தன்மை.*

இப்பொழுது இருக்கிறதுபோல கடுதாசி நாணயம் என்கிற ஏற்பாடு ஒன்றுமின்றி, எங்கும் பொன் வெள்ளி நாணயமாத்தி ரம் நடமாடுமானால் வர்த்தகம் இவ்வளவு சுறுக்கும் விஸ்தீரணமு மாய் நடந்தேறாது. ஒவ்வொரு வர்த்தகனும் தன் வர்த்தகத்துக் குத் தேவையான பணமுழுமையும் கட்டிச் சுமந்து ஊர்தோ றும் திரியவேண்டியதாய்வரும். அவ்வாறு பெருந்தொகையான பணத்தைச் சுமந்துகொண்டு பிரயாணம்போவதில் உண்டாகும் கஷ்டநஷ்டம் கொஞ்சமல்ல. அநேக சமயங்களில் பிராணனுக் கும் அபாயம் நேரிடும். மேலும் மேற்படி நாணயங்களை மாறி மாறி ஓயாமல் மாற்றுதல்செய்வதில் உண்டாகிற தேய்வு, உடைவு முதலிய சேதங்களெல்லாமலும், அவற்றை ஒவ்வொன்றாய் எண் ணித் தொகையிடுவதில் மிகுந்த காலநஷ்டமும் உண்டுபடும். இதெல்லாம் பாரிவர்த்தகத்துக்குப் பெரிய தடைகளாம்.

இவ்வகையான தடைகளையெல்லாம் மேலே அதிகாரத்துட் காட்டிய பந்துசெய்வினையால் வெகு சுலபமாய் நிவிர்த்திக்க லாம். எவ்வாறெனில், பல வர்த்தகர்கள் ஒன்றுசேர்ந்து நம்பிக் கையுள்ள ஒருவனை, தங்களுக்கு உண்டிக்காரனாக நியமனஞ் செய்து, அவன் வசத்தில் தங்கள் பணங்களைக் கொடுத்துவைக்க வேண்டும். பின்பு தங்களுக்குப் பணம் தேவையாயிருக்கும் போது அந்த உண்டிக்காரன்பேருக்கு இரண்டொருவரியில் ஒரு

சீட்டுமாத்திரம் எழுதி அனுப்பவேண்டும். அவன் தன்னிடத்தில் பணம்போட்டிருக்கிற ஒவ்வொருவருடைய பற்று வரவுக்கும் கிரமமாய்க் கணக்கு வைத்துக்கொண்டு எப்பொழுதும் அந்த வேலையாயிருக்கிறபடியால், அந்தந்தத் தொகையை அந்தவர் கணக்கில் செல்லெழுதிக்கொண்டு உடனே பணஞ்செலுத்திவிடுவான். இந்த ஏற்பாட்டினால் நூறுபேர் இருநூறுபேர் தனித்தனி பார்த்துச் சங்கடப்படவேண்டிய வேலை முழுமையும் ஒருவனால் முடிகிறதுமன்றி, வேலையும் வெகுதூரம் சுருங்கி காலமும் ஆதாயமாகிறது.

மேலும் இந்த ஏற்பாடானது பொருள் சேர்த்துவைப்பதற்கு மாத்திரமல்ல, பலருடைய அவசரங்களுக்கும் உதவியாகக் கடன் கொடுத்து வாங்கவும், அவ்வழியால் பொருளை வளர்க்கவும் அநுகூலமாகிறது. ஐம்பதுபேரிடத்தில் ஆளுக்குப் பதினாயிரம் ரூபாய் வீதம் ஐந்துலட்சம் ரூபாயிருக்கிறது. அப்பொருளை வட்டிக்குக் கொடுத்து வளர்க்க அவர்கள் ஒவ்வொருவருக்கும் மிகுந்த ஆசையுமிருக்கிறது. ஆனால் அதற்காக வேண்டிய காரியாதிகளைப்பார்க்க அவர்களுக்குப் போதுமான சாவகாசமில்லை. இன்னாருக்குப் பணந்தேவை, இன்னாருக்குக் கடன்கொடுக்கலாம், இன்னாருடைய ஆஸ்தி, நாணயம், யோக்கியதை இன்னதென்பதைப்பற்றி ஒன்றுந்தெரியாது. இச்சமயத்தில் நாணயகாரனாகிய ஒருவன் நடுநின்று மேற்படி வேலைபார்க்க ஏற்பட்டு, அவர்களிடத்திலிருந்து அந்தப் பணங்களை வாங்கித் தகுதியும் தேவையுமானவர்கள் பார்த்துக் கடன்கொடுத்துக் கடைசியில் வட்டியுமுதலும் வசூல்செய்து உடையவர்களுக்குக் கொடுப்பானாகில், அது பணக்காரர் கடன்வாங்குகிறவர்கள் என்று அவ்விருதிறத்தாருக்கும் எவ்வளவு பேருதவியாயிருக்கும். இதுகாரியத்தில் உழைக்கிற மனுஷனுக்கு இதன் வருமானத்தில் கொஞ்சம் கொடுக்கிறது ஒரு கட்சிக்காரருக்கும் நஷ்டமும் பாரமுமல்ல. இந்தச் சேவைக்குப் பதிலாக அவர்கள் அடைகிற பலன் மிகவும் அதிகமாம்.

இம்முறைப்படி உண்டிவர்த்தக சாலையொன்று ஏற்படுத்த வேண்டுமானால் நாம் எவ்வளவு தொகையில் ஏற்படுத்த உத்தேசிக்கிறோமோ, அவ்வுத்தேசியத்திற்கிணங்க பங்கொன்றுக்கு 50 ரூபாய் அல்லது 100 ரூபாய் வீதம், ஆயிரம் அல்லது பதினாயிரம் பங்குகளாகப் பிரிக்கவேண்டும். தங்கள் பணத்தை வட்

டிக்குக்கொடுத்துவளர்க்க மனமுடையவர்கள் தங்கள் இஷ்டப்படி ஒன்றோ, இரண்டோ, பத்தோ, நூறோ தாங்கள் போடவிரும்பும் தொகைக்குச் சரியான பங்குகளுக்குக் கையெழுத்துவைத்துப் பணஞ்செலுத்தவேண்டும். இந்தப்பிரகாரம் பத்துலட்சமோ, இருபதுலட்சமோ குறித்ததொகை சேர்ந்தபிற்பாடு கடன்வாங்க விரும்புகிறவர்களுக்குத் தகுதிபார்த்துக் கடன்கொடுத்து முதலை வளர்க்கவேண்டும். குறித்தகாலத்தில் ஆதாயம் செலவுகணக்குப் பார்த்து லாபத்தைப் பங்குவீதம் பகுந்துகொடுக்கவேண்டும். இதன் மத்தியில் பங்காளிகளில் யாருக்காவது தாங்கள் போட்ட பணம் திரும்பத் தேவையென்று வருமாகில், தேவைக்காரர்களுக்கு அந்தப் பங்கை விற்று அதற்குரிய தொகையை அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அந்தப் பங்கை வாங்கினவர்கள் மேற்படி உண்டிவர்த்தக சாலையின் பங்காளிகளாகி, அதன் வருமானத்தில் பங்குவீதம் பலன்பெறுவார்கள்.

ஒருவன் மேற்படி உண்டிவர்த்தக சாலையில் ஆயிரம் ரூபாய் கடன்வாங்க விரும்பினால் அவனுடைய விருப்பப்படி மேற்படி தொகைக்கு ரொக்க நாணயமாவது, வேண்டும்போது பணமாக மாறத்தக்க உண்டி அல்லது பாங்கி நோட்டாவது கொடுக்கப் படும். உண்டிக் கடுதாசி அல்லது பாங்கி நோட்டானது மெத்த லேசாயும், கொண்டுபோவதற்கு வெகு சுளுவாயும், எதுவிஷயத்திலும் மிக வசதியாயுமிருக்கிறபடியினால் ரொக்கப்பணத்தைப் பார்க்கிலும் கடுதாசி நாணயமே அநேகருக்குப் பிரியமாயிருக்கும். இதனால் சொற்பகாலத்துக்குள் உண்டிவர்த்தக சாலையின் ரொக்க நாணயமெவ்வளவோ அவ்வளவு தொகைக்குச் சரியாய்க் கடுதாசி நாணயமும் உற்பத்தியாகிவிடும். ஆகவே ரொக்க நாணயத்திற்குப் பதிலாகக் கடுதாசி நாணயமே வெளியே போக்குவரவுசெய்கிற நாணயமாகி எங்கும் பரவுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ரொக்க நாணயமாக லட்சம் ரூபாய் கைமுதல் வைத்துக்கொண்டு ஆரம்பித்த உண்டிவர்த்தக சாலையானது பின்னும் லட்சம் ரூபாய்க்கு உண்டிகள் அல்லது நோட்டுகள் பிறப்பித்து, அவற்றை ரொக்க நாணயம்போலவே தகுந்த ஆட்களுக்கு கடன்கொடுத்து அவற்றின் தொகைக்குரிய வட்டிவாங்கி லாபமடையலாம். ரொக்க

நாணயமாக லட்சம் ரூபாய் கைமுதல் இருந்தால், பின்னும் லட்சம் ரூபாய்க்கு உண்டி பிறப்பித்து வர்த்தகம் நடத்தலாமென்று மேற்காட்டினேமே, ஆனால் அந்தப்பிரகாரம் எப்பொழுதும் கைமுதலும் உண்டித்தொகையும் சமமாயிருக்கவேண்டிய அவசாமில்லை. கைமுதல் குறைந்து உண்டித்தொகை அதிகப்பட்டாலும் யாதொரு பயமும் மோசமுமின்றி உண்டிவர்த்தகஞ்செய்யலாம். எப்படியெனில், வெளியேபோகும் உண்டிகளெல்லாம் சிலகாலம் அங்கங்கே பாவிநின்று, கடைசியில் பணம் மாறும் படியாகக் கொஞ்சங்கொஞ்சமாய்க் காலாந்தரத்தில் வந்து சேருமேயன்றி, எல்லாம் ஒரேசமயத்தில் மொத்தமாய் வந்து குவியமாட்டாது. ஆதலால் வெளியேபோன உண்டிகளின் தொகை லட்சமென்றால், அந்த லட்சத்துக்கும் லட்சம் ரூபாய் ரொக்க நாணயமாகக் கையிருப்புவைத்துக் காத்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. ஆக்வே, அப்போதப்போது நேரிடுகிற அவசரத்துக்கும் தேவைக்கும் தக்கபடி ரொக்க நாணயம் செல்லாவதற்குப் போதுமான கையிருப்பும், நஷ்டம்நேரிட்டால் அதைத் தாங்கத்தக்க சக்தி இந்த வர்த்தகசாலைக்கு உண்டென்று தன் பற்றுவரவுக்காரர்களுக்கு நம்பிக்கை உண்டுபண்ணப் போதுமான கைமுதலும் இருந்தாற்போதும். இவ்விருவிஷயங்களிலும் குறைவில்லாதிருக்குமாகில், வேண்டும்போதெல்லாம் உண்டிகளுக்குப் பணஞ்செல்லாக யாதொரு தடையுமிராது. அப்படியாகும்போது கடுதாசி நாணயமே எங்குஞ்சென்று பாம்பிவிடுமாகையால், ரொக்க நாணயத்தில் மிகுதியான பங்கு உபயோகமற்று இருப்பிற்கிடக்கும். ஆதலால் உண்டித்தொகைக்குச் சரியாக ரொக்க நாணயம் கையிருப்பு இருக்கவேண்டியது அவசியமில்லையென்று ஏற்படுகிறது. கையிலிருக்கிற தொகைக்கு அதிகமாய் உண்டிவர்த்தகம் நடப்பிக்கலாம். ஒருதேசத்தில் பண்டமாற்று நடந்தேறுவதற்கு 20 கோடி ரூபாய் வேண்டுமானால், கடுதாசி நாணயம் உபயோகிக்கிற விஷயத்தில் 5 கோடி ரூபாய் ரொக்க நாணயம் இருந்தாற்போதும். மற்ற 15 கோடி ரூபாய்க்கும் கடுதாசி நாணயம் ஈடுசெய்யும்.

## ஆபிரிக்கா பிரயாணம்.

(தொடர்ச்சி.)

கெம்மோ என்ற பட்டணத்தில் பார்க் என்பவர் தம்மிடத்திலிருந்த பொன், வஸ்திரம், அம்பர் முதலான வஸ்துக்களைப் பூறிகொடுத்து, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு அன்று சாயரக்ஷை மெணாயா என்ற ஊரில் போய்த் தங்கினார்.

அவர் பெப்ருவரிமீ 14உ அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப் பிரயாணஞ்செய்கையில், வழிக்குச் சற்று தூரத்திலிருந்த ஓர் புதரில் நீகிரோ மனுஷர் இரண்டுபேர்கள் ஒளித்துக்கொண்டிருந்ததைக் கண்டார். அப்போது அவருக்கு வழித்துணையாகக் கூடவந்த ராஜாவின் மனுஷர் அவ்விருவரைப் பிடிக்கும்படியாகத் தங்கள் வெடிகளை எடுத்துக்கொண்டு குதிரைகளை வேகமாய்ச் செலுத்தி அப்புதருக்குச் சமீபமாய்ப் போனார்கள். அவர்கள் வெடிக்குண்டு செல்லும் தூரத்தில் போனஉடனே, புதருக்குள் பதுங்கியிருந்த நீகிரோ மனுஷர் இருவரும் தங்கள் வசத்திலிருந்த அம்புகளை எடுத்து வில்லில் வைத்து எதிரிகள் கிட்டவராதபடிக்கு அவர்கள்மீது அம்பெய்வதுபோல் காட்டினார்கள். அப்படியிருந்தும், ராஜாவின் சேவகரில் ஒருவன் ஒன்றுக்கும் அஞ்சாமல் அவர்களுக்குச் சமீபமாய்ப் போய், அவர்கள் பேர் ஊர் முதலியவற்றைப்பற்றி விசாரித்தபோது, அவர்கள் மாறுத்தரமாகத் தாங்கள் தூர்டா ஊரார் என்றும், தாங்கள் அப்புதருக்கு தம்பாங்கு என்னும் ஒருவிதப் பழங்களைப் பறிக்கவந்ததாயும் சொன்னார்கள். இப்பழங்கள் மஞ்சள்நிறமாயும், தேன்போல் தித்திப்பாயும் இருக்கும். அந்நீகிரோ மனுஷர் தாங்கள் பறித்துவைத்திருந்த பழங்களில் இரண்டு கூடைநிறையக் கொண்டுவந்து, தங்களைப் பிடிக்கவந்த சேவகர்முன் வைத்தார்கள். ஆபிரிக்காதேசங்களில் வாசம்பண்ணும் ஜனங்களுக்கு இப்பழங்கள் மகா அருமையானவை. அவர்கள் அவைகளை செடிகளினின்று அறுத்து, வெளியில் காயவைத்து உரலில்போட்டு இடித்துக் கொட்டைகளைப் போக்கிவிட்டு, அவற்றிலுள்ள மாவுபோன்ற சதையை எடுத்துத் தண்ணீர்விட்டுப் பிசைந்து ரொட்டிபோல் வெகு தித்திப்பான ஓர்வித பலகாரஞ்செய்து மிகவும் பிரியமாய்ச் சாப்பிடுவார்கள். கொட்டைகளைத்

தண்ணீரில் போட்டுக் குலுக்கி, அவைகளில் ஒட்டியிருக்கும் மாவின் சாரஞ்சேர்ந்து தித்திப்பாகும் அத்தண்ணீரில் கொஞ்சம் தினைமாவுபோட்டுக் கஞ்சிகாச்சிக் குடிப்பார்கள். இக்கஞ்சிக்கு வெண்டி என்று பேர். லூடமா என்னும் நாட்டிலுள்ள அநேக ஜனங்களுக்கு பெப்ருவரிமாசத்திலும் மார்ச்சுமாசத்திலும் இதுவே காலையில் சாப்பிடுகிற போஜனம்.

பார்க் என்பவர் பெப்ருவரிமீ 16உ பன்னிங்கெடு என்னும் ஊருக்குப்போய்ச் சேர்ந்தார். அவர் அன்று பகல் அவ்வூரில் ஒரு குடிசைக்குள் ஒரு மாட்டுத்தோலின்மேல் படுத்து நித்திரைசெய்யும்போது, அவ்வூர்ப் பெண்கள் இட்ட கூக்குரலையும் ஜனங்கள் செய்த சந்தடியையும் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தபோது, ஆடுமாடுகளைக் கொள்ளையாடும்படி மூர்ஜாதியார் என்ற ஓர்ஜாதி மகமதியர் வழக்கப்பிரகாரம் அவ்வூருக்குள் வந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டார். பின்பு அவர் அக்குச்சுவீட்டின்மேல் ஏறிப்பார்த்தபோது குதிரைகளின்மேல் ஏறியிருந்த ஐந்து துலுக்கர் அநேக ஆடுமாடுகளைத் தங்கள் கைகளில் பிடித்திருந்த வெடிகளினால் அடித்து ஓட்டிக்கொண்டு ஊருக்குச் சமீபமாய் வருவதைக் கண்டார். அவர்கள் ஊருக்குள் நுழைந்து அங்கிருந்த ஆடுமாடுகளில் மிகக் கொழுத்திருந்த பதினாறு ஜந்துக்களைப் பிடித்து அதிவேகமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் இவ்வளவு பகிரங்கமாய்க் கொள்ளையிட்டுக் கொண்டுபோகையில், அந்தப் பட்டணத்தின் ஜனங்கள் ஐந்நூறு பேர்வரையில் ஒன்றாய்க் கூடியிருந்தும், அவர்கள் அத்துலுக்கரை எதிர்க்கத் துணியாமல் மிகுந்த திகிலடைந்தவர்களாய் ஒன்றுஞ் செய்யாமல் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகிலும் அவர்களில் நாலுபேர்கள் தங்கள் வெடிகளைக்கொண்டு சத்துருக்களைச் சுட்டார்கள். ஆனால் அவர்கள் செய்து உபயோகித்த வெடிமருந்து செம்மையானதல்லவாகையால், அவர்கள் அடிக்கடி சுட்டும் அதனால் சத்துருக்களுக்கு ஒரு சேதமுமுண்டாகவில்லை. சற்றுநேரத்திற்குப்பின்பு சில மனுஷர் ஒரு வாலிபனை ஒரு குதிரையின்மேல் வைத்துத் தூக்கிக்கொண்டு ஊருக்குள் வந்தார்கள். இவ்வாலிபன் துணிந்து சத்துருக்களுக்குச் சமீபமாய்ப்போய் அவர்களின்மீது அம்பெய்ய எத்தனித்தபோது, அவர்களில் ஒருவன் சுட்ட துப்பாக்கிக் குண்டினால் காயப்பட்டான். அவன்

தாய் இதைக் கண்டமாத்திரத்தில் கையை நெரித்துக்கொண்டு அவனுக்கு முன்பாகப் போய்ப் பெரும் கூக்குரலிட்டு, அவனுடைய நற்குண நற்செய்கைகளை வர்ணித்து ஒப்பாரிசொல்லி அழுதாள். "ஐயையோ! தெய்வமே! என் அருமையான மகன் ஒருநாளும் பொய்சொல்லாதவனே. சத்தியநெறி தவருமல் நடந்த என் பிள்ளைக்கு இந்த இக்கட்டு ஏன் வந்தது" என்று சொல்லி அலறி அழுதாள். அதைப் பார்த்தவர்களெல்லாரும் மனம்பொறுக்கமாட்டாமல் ஓலமிட்டழுதார்கள். அங்கிருந்த சிறுவர்கள் அத்துக்ககாட்சியைக் கண்டு உணர்வடைந்து, நாமும் இந்த வாலிபனைப்போல் பொய்பேசாமல் எப்போதும் சத்தியத்தையே பேசினுல், நம்முடைய உற்ருர்பெற்ருர் யாவருக்கும் அதனுல் அதிக சந்தோஷமுண்டாகும். இப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் நம்முடைய நற்குணங்களைப்பற்றி வியந்துபேசுவார்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். இவ்வாறு அங்குண்டான துக்கமும் கூக்குரலும் சற்று அமர்ந்தபின்பு, அவ்வாலிபன் பட்ட காயத்தைச் சோதித்துப்பார்க்கும்படிக்குப் பார்க் என்பவரைக் கேட்டுக்கொண்டார்கள். அப்படியே அதை அவர் சோதித்துப் பார்த்தபோது, துப்பாக்கிக் குண்டானது முழங்காலின் கீழுள்ள இரண்டு எலும்புகளையும் நொறுக்கிவிட்டதெனக் கண்டார். அக்காயத்திலிருந்து மிகுதியான ரத்தம் ஓடிவந்ததால், அவ்வாலிபன் பிழைப்பான் என்கிற நம்பிக்கைக்கு இடமில்லாமலிருந்தது. அவனிருந்த இம்மோசநிலைமையைப் பார்க் என்பவர் பார்த்து, காயம் பட்ட காலை வாங்கிவிடுவது அவசியமென்று சொன்னுர். இவ்வித ரணவைத்தியத்தைக்குறித்து ஒருக்காலும் கேள்விப்படாத அப்பேதை ஜனங்கள் அவர் சொன்னதைக்கேட்டுத் திடுக்கிட்டு, அவர் மனிதர்களைக் கொன்றுதின்னும் நரமாம்சபக்ஷணியாயிருக்க வேண்டும், இல்லாவிட்டால் இவ்வித பயங்கரமான செய்கையைச் செய்யும்படி சொல்லமாட்டார் என்று பேசிக்கொண்டார்கள். பின்பு அவர்கள் அக்காயத்தை ஆற்றும்படி தங்களுக்குத் தெரிந்த சில வைத்திய பக்குவங்களைச் செய்தார்கள். ஆனுல் அவ்வாலிபன் அன்று சாயங்காலமே இறந்துபோனுன்.

பெப்ருவரிமீ 1௳ பார்க் என்பவர் லூடேமார் நாட்டின் ஓரமாயிருந்த ஸிம்பிஙிங் என்னும் ஊருக்குப் போனுர். இவ்விடத்திலிருந்துதான் பார்க் என்பவருக்கு முந்தின ஆபிரிக்கா

பிரயாணியும், மிகவும் சௌரியவானுமாகிய மேஜர் ஹவ்ட்டன் என்பவர் டாக்டர் லேயிட்வி என்பவருக்கு (மையில்லாததினால்) பென்சிலினால் ஒரு சிறு கடிதம் எழுதியனுப்பினார். இவர் பார்க் என்பவரைப்போலவே ஆபிரிக்கா பிரயாணஞ்செய்வதில் அநேக வித துன்பங்களையும் இடையூறுகளையும் அநுபவித்து கடைசியில் துலுக்கர் அவரைப் பிடித்து உள்ளது உரியதெல்லாம் பறித்துக்கொண்டதினாலே அநேகநாள் அவர் அன்ன ஆகாரமில்லாமலிருந்த அவஸ்தைப்பட்டு இறந்துபோனார். அவர் பசியினால் இறந்தாரோ, மகம்மதியரின் கையினால் இறந்தாரோ நிச்சயந் தெரியவில்லை. அவர் இறந்தபின்பு அவருடைய பிரேதத்தை எடுத்துக்கொண்டுபோய் நாயும் நரியும் பிடுங்கித் தின்னும்படி ஒரு காட்டிலெறிந்துவிட்டார்கள். பார்க் என்பவர் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு ஒரு மலையடிவாரத்தில் கட்டப்பட்டிருந்த ஜாரா என்னும் ஒரு பெரிய பட்டணத்திற்போய்ச் சேர்ந்தார்.

## கொய்யப்பட்ட புஷ்பங்கள்.

ஒருநாள் ஜார்ஜியானு என்ற ஓர் சிறு அங்கிலேயப் பெண்ணானவள், தோட்டத்திலிருந்து ஓடிவந்து தன் தாயைப்பார்த்து: அம்மா! நம்முடைய தோட்டத்திலுள்ள ரோஜாச்செடிகளில் புதிதாய் உண்டான மொக்குகளையெல்லாம் யாரோ அநியாயமாய்ப் பிடுங்கிப்போட்டார்கள்; நீங்கள் அதை வந்துபாருங்கள் என்க, தாயானவள்: அம்மா! அவைகளை நான்தான் பிடுங்கிப்போட்டேன்; வேறொருவருமல்ல என்றாள். இதைக் கேட்டமாத்திரத்தில் அப்பெண்பிள்ளையானவள் ஆச்சரியப்பட்டுத் தாயைப்பார்த்து: ஏனம்மா அவற்றைப் பிடுங்கிப்போட்டீர்கள்? உங்களுக்குப் புஷ்பங்களின்பேரில் இஷ்டமில்லையா? என்று கேட்டாள். அதற்குத் தாயானவள்: என் அருமைமகளே! எனக்குப் புஷ்பங்களின்பேரில் அதிக இஷ்டமிருப்பதினாலேயே அம்மொக்குகளைப் பிடுங்கிப்போட்டேன் என்றாள். பிள்ளை இதைக்கேட்டு அதிக ஆச்சரியப்பட்டு, என்ன அம்மா! நீங்கள் சொல்லுகிறது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. உங்களுக்குப் புஷ்பங்களின்பேரில் இஷ்டமுண்டானால் மொக்குகளைப் பிடுங்குவானேன் என்றாள்.

அதற்குத் தாய் பிள்ளையைப்பார்த்து: என் கண்மணியே! இக் காரியத்தை உனக்கு விளக்கிக்காட்டுகிறேன் கேள்: இந்த ரோஜாச்செடிகள் இன்னும் இளங்கன்றுகளாயிருப்பதால் இப்போதே அவைகள் மொக்குவிட்டுப் புஷ்பிக்க ஆரம்பித்தால், அவைகளின் பெலனும் சாரமும் வெகுசீக்கிரத்தில் குன்றி அற்றுப்போகும். அதனால் பின்னுக்கு அதிக நேர்த்தியான புஷ்பங்கள் அவைகளிலுண்டாகமாட்டா. ஆகையால் இவ்விளஞ்செடிகளில் முதலில் தோன்றும் மொக்குகளைப் பிடுங்கிப்போட்டால், வேர்கள் நன்றாயோடி பெலப்பட்டு, அநேக கிளைகளுண்டாகி செடிகள் ஓங்கி வளர்ந்து மிகுந்த பலனைக் கொடுக்கும். இப்போது இவ்விளஞ் செடிகள் ஒன்றத்தனை புஷ்பிக்குமானல், அவைகள் வளர்ந்து பெருகிப் பெலனடைந்தபின்பு இறுபத்தனைக்கு அதிகமாய்ப் புஷ்பிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை என்றாள். இதைப் பிள்ளை கேட்டு ஆச்சரியத்துடன் அப்படியா என்று சொல்லிவிட்டு, சற்றுநேரம் ஒன்றும் பேசாமல் யோசனைசெய்வதுபோல் சும்மாயிருந்தாள்.

பின்பு தாயானவள் மறுபடியும் சொல்லுகிறாள்: என் அருமை மகளே! ஒவ்வொரு செடிக்குள்ளும் ஓர் ஆச்சரியமான சத்துவம் இருக்கின்றது; இச்சத்துவந்தான் அதற்கு ஜீவன். இது இல்லாவிட்டால் செடிகளில் வேர்களும் கிளைகளும் இலைகளும் பூக்களும் உண்டாகமாட்டா. செடியில் மொக்குவிடும்போது இச்சத்துவம் மிகவும் அதிகமாய்ச் செலவாகிக் குறைந்துபோகின்றது. வேர்கள் செடிக்கு வாய்கள்போலிருக்கின்றன. அவைகள் பூமியின் சாரத்தை உட்கொண்டு செடிகளுக்குள் செலுத்துகின்றன. இலைகள் செடிகளுக்கு நுரையீரல் அல்லது சுவாசஇயந்திரம்போல் இருக்கின்றன. அவைகள் ஆகாயத்தை உட்கொண்டு செடிகளுக்கு நல்ல ஆகாரத்தையுண்டுபண்ணுகின்றன. புஷ்பங்களோ செடிகளுக்கு வாய்கள்போலாவது அல்லது சுவாசக்கருவிகள்போலாவது இல்லை. அவைகளால் செடிகளுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. ஆகிலும் புஷ்பங்களுண்டாகுஞ்சமயத்தில் வேர்கள் இலைகள் முதலிய மற்ற பாகங்களுண்டாகுஞ் சமயத்தைப்பார்க்கிலும், செடிகளின் சாரமும் சத்துவமும் அதிகமாய்ச் செலவழிந்துபோகின்றன. புஷ்பத்திற்குள்ளிருக்கிற விதை முற்றிப் பக்குவமாகும் சமயத்தில், செடியிலுள்ள சாரமெல்லாம் அதற்குப் போவதால் செடியின் மற்றப் பாகங்கள் வளராமல் நின்றுபோவதுண்டு.

37

ஆகையால் விவேகமுள்ள தோட்டக்காரர் செடிகள் ஓங்கிவளர்ந்து பின்னுக்கு அநேக மொக்குகள் விட்டுப் புஷ்பிக்கவேண்டுமென்று கருதிச் செடிகளில் முதலாவதுண்டாகிற மொக்குகளைப் பிடுங்கி விட்டு, செடியின் சாரமும் சத்துவமுமெல்லாம் வேர்கள் இலை கள் முதலிய பிரயோஜனமுள்ள பாகங்களுக்குச் செல்லும்படி செய்கிறார்கள் என்றாள்.

இவ்வாறு தாய் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளை யானது, சந்தோஷமும் ஆச்சரியமுமடைந்து சற்றுநேரம் யோ சித்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தது. அப் போது தாயானவள் மறுபடியும் பிள்ளையை நோக்கி: என் அன் புள்ள மகளே! இப்போது நான் சொல்லப்போகிறதை நீ கவன மாய்க் கேட்டு எப்போதும் நினைத்துக்கொள்ளவேண்டும். உன க்கு இப்பொழுது சில காரியங்கள் இவ்விளஞ்செடிகளில் முதலில் உண்டாகும் மொக்குகளைப்போல் இன்பமானவைகளாயிருக்கும்; ஆகிலும் பின்னுக்கு அவைகளால் உனக்கு நஷ்டமுண்டாகுமா கையால், அவைகளை நான் உன்னிஷ்டப்படிக்கு உனக்குக் கொடுக் கக்கூடாது. கதைப்புஸ்தகங்களை வாசிப்பதிலும், சிநேகிதருடன் உல்லாசமாய்க் காலத்தைப் போக்குவதிலும், வேடிக்கையான காக்ஷிகளைப் போய்ப் பார்ப்பதிலும் உன் காலத்தைக் கழிக்க உன க்கு அபேக்ஷையிருக்கும். ஆனால் இவைகள் பால்யத்தில் செய் யத்தக்கவைகளல்ல. வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நீ செய்ய வேண்டிய மகா முக்கியமான கடமைகள் அநேகமுண்டு. நீ அவை களை ஜாக்கிரதையோடு செய்துவந்தால் பின்னுக்கு அதிகப் பிர யோஜனமுண்டாகும். இளஞ்செடிகள் முதலாவது நல்ல வேர்கள் கிளைகள் இலைகள் விட்டு நன்றாய் வளர்ந்து பலப்படவேண்டியது அவசியம். அப்படியே நீ உன் வாலவயதில் பின்னுக்குப் பிரயோ ஜனமுள்ளவைகளைக் கற்கவும் செய்யவும் பழகவேண்டும். செடி கள் நன்றாய் வளர்ந்தபின் புஷ்பிக்கிறது அவற்றிற்கு அநுகூலமா யிருப்பதுபோல், நீ பெரிய ஆளாய் வளர்ந்தபின் மேலே கண்ட சந் தோஷமான காரியங்களைச் செய்தால் உனக்கு நஷ்டமுண்டாகாது.

சில தோட்டக்காரர் செடிகள் செழிப்பாய் ஓங்கி வளரவேண் டுமென்று நோக்காமல், அவைகள் அதிசீக்கிரமாய்ப் புஷ்பிக்க வேண்டுமென்று கருதி, அதற்கு வேண்டிய பக்குவங்களைச் செய்கி றார்கள். ஆனால் அப்படிப்பட்ட அச்செடிகளிலுள்ள சாரமெல்

லாம் முதல் புஷ்பங்கள் வழியாய்ப் போய்விடுமாதலால் அச்செடிகள் பலனற்றுச் சீக்கிரத்தில் சோர்ந்து அவலக்ஷணமாய்ப் போகும். இதுபோல, சில பெற்றோர்கள், பிள்ளைகள் உல்லாசத்திலும் வேடிக்கையிலும் காலஞ்செலவழிக்கும்படி இடங்கொடுக்கிறார்கள். இவ்வாறு அப்பிள்ளைகளுடைய இளம்பருவம் உல்லாசத்திலும் சிற்றின்பத்திலும் கழிந்துபோவதால் அவர்கள் மூடராகி அகங்கெட்டுப் பெலன்குன்றி களைமாறித் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் யாதொரு நன்மையும் பிரயோஜனமுமற்றவர்களாய்ப் போகிறார்கள் என்றாள். ஐயோ, எத்தனைபேருடைய காரியம் இவ்விதமாகவே முடிகிறது!

---

## தீக்குருவி.

இது பட்சிகளிலெல்லாம் பெரிய பட்சி. இதன் சிறகுகள் பறக்கிறதற்கு ஏற்றவையல்ல. ஆதலால் இதை இருகால் மிருகம் என்றாவது, நடக்கிற பட்சியென்றாவது சொல்லலாம். சாதாரணமாய் இதன் உச்சிமுதல் பூமிவரையும் ஏழு அடி உயரமிருக்கும். முதுகிலிருந்து தரைமட்டும் அளந்தால் நாலு அடி உயரம்மாத்திரமிருக்கும். அதன் கழுத்தும் தலையுமாத்திரம் மூன்றடி உயரமாகிறது. கழுத்தை நீளவிட்டு நெடுவாட்டாக அளந்தால் அதன் வால்வரையும் ஆறு அடியும், வால் ஒரு அடியும், ஆக ஏழுஅடி நீளமிருக்கும். அதன் சிறகொன்றும் மூன்றடிப் பறப்புள்ளது.

இது உஷ்டணபாகையிலுள்ள பாலைவனங்களிலும், தேரிக்காடுகளிலுந்தான் வாசஞ்செய்யத்தக்கது. ஆபிரிக்கா அரேபியாவைச் சேர்ந்த மணல்வனாந்தரங்களில் இந்தப் பட்சிகளை அளவுசங்கையில்லாமற் காணலாம். தூரத்தில் வருகிறவர்களுடைய பார்வைக்கு இதன் கூட்டம் குதிரைசேனைபோலத் தோன்றும். பிரயாணிகள் அநேக சமயங்களில் அப்படியே எண்ணிப் பயந்திருக்கிறார்கள். இந்தப் பட்சிஜாதியினுடைய போசையையும் பசி தீவிரத்தையும் பார்த்தால் இதுவிஷயத்தில் இதற்கு நிகரான ஜந்து வேறொன்றுமில்லையென்று சொல்லலாம். மண், மயிர், கல், தோல் என்ன கண்டாலும் எடுத்து விழுங்கிவிடும். இதனால் எவ்வளவு

கொடிய வனாந்தரத்திலும், எப்படிப்பட்ட பாழ்ங்காட்டிலும் இதற்கு இரை அகப்படாத இடமிருக்கமாட்டாது. இரைப்பையில் ஜீரணிக்கமாட்டாத கல் முதலிய கடினபதார்த்தங்களெல்லாம் விழுங்கினபடியே வெளிப்பட்டுவிடும். ஆயினும் காய்கறிதான் இதற்கு முக்கியமான ஆகாரமென்று பலர் நினைக்கிறார்கள்.

தீக்குருவியானது மணலிலே முட்டையிட்டு அதன்மேல் மணல்போட்டு மூடிவிடுமென்றும், அம்முட்டை சூரிய வெப்பத்தினால் குஞ்சுபொரிக்குமென்றும் சாதாரணமாய்ச் சொல்லுகிறதுண்டு. ஆனால் அது மற்றும் பட்சிகளைப்போலவே கூட்டில் முட்டையிட்டு, ஆணும்பெண்ணும் மாறிமாறி அடைகாத்து குஞ்சுபொரிக்கத் தாம் கண்ணாரக்கண்டதாக கோல்பென் என்ற ஒருவர் சொல்லுகிறார். அந்தப் பட்சிகள் இல்லாதவேளையில் யாராவது வந்து அவற்றின் முட்டைகளைத் தொட்டுவிட்டால், அந்தப் பட்சிகள் வந்தவுடனே அதை வாசனையினால் அறிந்துகொண்டு கூட்டிலிருக்கும் முட்டைகளையெல்லாம் மிதித்து உழக்கி அழித்துப்போடுமாம். இதனால் தீக்குருவி முட்டைகளை எடுக்கப்போகும் ஆபிரிக்கர், அதன்கூட்டிலுள்ள முட்டைகளின்பேரில் தங்கள் கைபடாமல் வெகு ஜாக்கிரதையாய் நின்று கோலக்கொம்பினால் அவற்றைக் கூட்டைவிட்டு வெளியே தள்ளி அப்புறம் எடுத்துக்கொண்டுபோவார்களாம்.

தீக்குருவி வேட்டையானது மிகவும் கஷ்டமானபோதிலும், மற்றெல்லா வேட்டைகளைப்பார்க்கிலும் மிக வேடிக்கையும் விநோதமுமானதாம். இந்த வேட்டைக்கென்று அரபியர்கள் மகா வேகமும் நேர்த்தியுமான குதிரைகளைத் தெரிந்து வளர்க்கிறார்கள். வேட்டையாடுகிறவர்கள் தூரத்தில் இந்தப் பட்சியைக் கண்டவுடனே தங்கள் குதிரையை நாற்கால் பாய்ச்சலில் விட்டால், அது பயந்து மலைக்கு ஓடிவிடுமென்று நினைத்து, குதிரையை அதிக வேகமாய் ஓட்டாமல் நிதானமாய் விட்டுக்கொண்டு போவார்களாம். அது இவர்களைத் தூரத்தில் வருகையிலேயே பார்த்து, முதலில் தனக்கு வருமோசத்தை அறியாமையினாலோ அல்லது எப்படியும் தப்பி ஓடிப்போகலாமென்கிற தைரியத்தினாலோ மெதுவாய் ஓடுமாம். இந்த ஓட்டம் ஒரு ஆள் ஓட்டத்துக்குச் சமமாயிருக்குமாம். அது ஓடும்போது தன் சிறகுகள் இரண்டையும் மனுஷர்களுடைய கைகளைப்போல, கால்நடைக்குச் சரியாய் வீசிக்

கொண்டு போகுமாம். அது ஓடுகிற ஓட்டத்துக்குச் சீக்கிரத்தில் வேட்டைக்காரர் கண்களில் அகப்பட்டாமற் போய்விடக்கூடும். ஆனால் அது ஒரு நேருக்கு ஓடுகிறதில்லை. வளைந்து வளைந்து ஓடுமாம்; அதனால் வேட்டைக்காரர் குறுக்காக ஓடி அதற்குச் சமீபித்துக்கொள்வார்கள். ஆயினும் அதன் ஓட்டத்தைத் தொடர்ந்து பிடிக்க முடியாது. இந்தப்பிரகாரம் அந்தப் பட்சி இரண்டுமூன்று நாள் இளைப்பொன்றுமில்லாமல் ஓடி இளைத்து இனித் தப்புவதற்கு வழியில்லையென்று கண்டபின் சத்துருவின் கண்களுக்கு மறைந்து கொள்ளலாமென்று எண்ணி மணற்குள்ளாவது யாதொரு செடிக்குள்ளாவது தன் தலையைப் புகுத்துக்கொண்டு கிடக்குமாம். பின்பு வேட்டைக்காரர் வந்து அதைப் பிடித்துக்கொள்ளுவார்கள். அது இயல்பாய் மெத்த சாந்தமான பட்சியென்றாலும், சில சமயங்களில் தப்பித்துக்கொள்ள இடமில்லாதபோது வேட்டைக்காரர்மேல் பாய்ந்து தன்னுடைய மூக்கு, சிறகு, கால் இவற்றினால் சண்டைபண்ணுமாம்.

சில இடங்களில் இந்தப் பட்சிகளை வளர்த்துக் குதிரையைப் போல் அதில் ஏறிச் சவாரிசெய்கிறார்கள். அதன்மேல் ஏறிப் பிரயாணஞ்செய்கிறதுமுண்டாம். அது இரண்டு மனிதரைத் தன் முதுகிற் சுமந்துகொண்டு பந்தயக்குதிரையைப்பார்க்கிலும் வேகமாய் ஓடுமாம்.

## பதார்த்த விஞ்ஞான சாஸ்திரம்.

இந்த உலகத்தில் பட்சி மிருகங்கள் முதலான ஜந்துக்களுடைய தன்மையையும், மரம் செடி கொடி முதலான உயிரில்லாதவற்றின் தன்மையையும் தெரிவிக்கிற நூலாகிய பதார்த்த விஞ்ஞான சாஸ்திரத்தைப் படிப்பதனால் ஒருவித இன்பமுண்டாவதுமல்லாமல், உலகவாழ்க்கையில் நேரிடும்படியான பலவித துன்பங்களினின்றும் தப்பித்துக்கொள்வதற்கு வழிகளையும் அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கும்.

இதற்கு இரண்டு திருஷ்டாந்தஞ் சொல்லப்படுகிறது. ஒரு காலத்தில் யௌதி என்னும் பெயரையுடைய ஒரு ஐரோப்பியர்

இன்னும் சிலருடன் கடலில் கப்பலேறி, அமெரிக்காகண்டத்திலி ருக்கிற ஒரு தேசத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவனிடத்தில் சுவர்க்கோழி ஜாதி யில்சேர்ந்த சிறியபட்சி ஒன்றிருந்தது. அவன் ஏதோ ஒருவித் சிறுநோயால் வருந்திக்கொண்டிருந்தபடியினாலே இது கூப்பிட்டுக் கொண்டிருந்தால் தனக்குப் பொழுதுபோக்காயிருக்குமென்கிற கருத்தினால் இதைக் கொண்டுவந்தான். ஆனால் கப்பலேறினது முதல் அது கூவுதலை விட்டுவிட்டபடியினாலே அவன் மனக் குறையுடன் வந்துகொண்டிருந்தான். இப்படி இருக்கையில் ஒரு சமயத்தில் அங்கிருப்பவர்களுக்குப் போதுமான தண் ணீர் கப்பலில் இல்லையென்று தெரியவந்தபடியினாலே, தண்ணீர் மொண்டுகொள்கிறநிமித்தம் சமீபத்திலிருக்கும்படியான பூமியை நோக்கிப்போகும்படி கப்பலோட்டும் அதிகாரியினால் உத்தரவு கொடுக்கப்பட்டது. இப்படி வழிவிட்டுப் போய்க்கொண்டே யிருக்கையில், ஒரு சமயத்தில் அதுவரையில் வாயைத் திறவாம லிருந்த பட்சி அப்போது இருந்தாப்போலிருந்து கூப்பிடத்தொ டங்கிற்று. தாங்கள் விரும்பிவந்த பூமி சமீபித்திருப்பதினாலே தான் அது கூப்பிடத்தொடங்கிற்றென்று ஆவலுடன் கப்பலின் மேலேறிப் பார்க்கையில், கப்பலின் வழிக்குக் குறுக்கில் ஐம்பது கஜத்துக்குள் ஒரு கற்குன்றிருப்பதாகத் தெரியவந்தது. அது கண்டு கப்பலைத் திருப்பி, வேறுவழியாய் ஓட்டிக்கொண்டுபோனார் கள். இந்தச் சிறுபட்சி நெடுநாள் சும்மாவிருந்து ஒரு சமயத்தில் கூச்சலிட்டதினால், அந்தக் கப்பலில் போய்க்கொண்டிருந்த இரு நூறு முன்னூறுபேர்களுடைய உயிர் தப்பிற்று. அதன் கூச்சலின் காரணத்தை அறிந்துகொள்ளாவிட்டால் தப்பாமல் கப்பலானது அந்தக் குன்றின்மேல் மோதி, அத்தனைபேரும் இறக்கும்படி நேரிட்டிருக்கும்.

சில வருஷங்களுக்குமுன் இங்கிலாண்டு தேசத்துக்கருகில் ஒரு கப்பலில் அநேகம் ஜனங்கள் போய்க்கொண்டிருக்கையில், ஒருநாளிரவில் கப்பல் காற்றுமழையிலகப்பட்டுக்கொண்டு தடந் தடுமாறி ஓடிப்போய், ஒரு கல்குன்றில் மோதி உடைந்துபோய் விட்டது. அதிலிருந்தவர்களில் நாலுபேர்மாத்திரம் கடலில் முழு கிப்போகாமல் தப்பினார்கள். அவர்களும் பிழைக்கிற ஆசை

வைக்காமல், கடலில் தடுமாறிக்கொண்டே போகையில், ஒரு சிறு குன்று அகப்பட்டு அதன்மேல் ஏறத்தொடங்கினார்கள். இவர்கள் ஏறத் தண்ணீரும் ஏறிக்கொண்டேவந்தது. அதைப் பார்த்ததில் அந்தக் குன்றுக்குமேலும் தண்ணீர்வந்து அதுவும் முழுகிப் போகும்போலிருந்தது. இவர்களுக்கு அந்த நெருங்கிய இருளில் அதைவிட்டு அப்புறம்போகத் திக்குத்தெரியவில்லை. அவர்கள் எந்த இடத்தில் இருந்தார்களோ அதுமாத்திரம் கண்ணுக்குத் தெரிந்ததேயல்லாமல், சுற்றிலுமிருப்பதெல்லாம் ஒரே இருள்மயமாயிருந்தது. அந்த இடத்திலும் தண்ணீரேறி இடம் குறுகிக்கொண்டே வந்தது. தம்முடைய வலிமையினாலும், உரத்துக் கூச்சலிட்டு தங்களுடைய ஸ்திதியைக் கரையிலிருப்பவர்க்குத் தெரிவிப்போமென்றால், கடலோசையினாலும் காற்றுமழையினோசையினாலும் அது அடங்கிப்போகும்; கரையிலிருப்பவர்களுக்குக் கேளாது. அது கேட்டால் கடவுளுடைய காதுக்கே கேட்கவேண்டியதே தவிர, மனிதனுடைய காதுக்குக் கேட்கப்போகிறதில்லை. ஆகையினாலே தாம் தப்பாமல் இறந்துபோவோமென்று அவர்களுக்குள் நிச்சயமாய்விட்டது. ஆனாலும் அங்கேயேயிருந்து தண்ணீரில் அகப்பட்டிறப்பதைவிட, உடனே கடலில் குதித்துவிட்டால் எங்கேயாவது மேடானவிடம் அகப்படலாமென்கிற யோசனையுடன் தண்ணீரில் குதிக்கப்போகையில், அவர்களிலொருவன் அங்கே முளைத்திருந்த ஒரு செடியை அந்த ஆபத்தில் பிடித்துக்கொண்டான். அதேசமயத்தில் கூட ஒரு மின்னலும் மின்னவே, அந்தச் செடி இன்னதென்று அவனுக்குத் தெரிந்ததுமல்லாமல், அது தண்ணீர் தங்குமிடத்தில் பயிராவதல்லவென்பதும் அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது. ஆகையினாலே இதை நம்பிக்கொண்டு அந்தக் குன்றின் நுனிவரையில் தண்ணீர் ஏறிவரமாட்டாதென்கிற ஒரு தைரியமடைந்து, தண்ணீரில் குதிக்கிற யோசனையை நிறுத்திச் சற்றுநேரம் பார்த்தார்கள்; தண்ணீர் ஏறிவரவில்லை. அந்த இரவுமுழுதும் அவ்விடத்திலேயே தங்கியிருந்தார்கள். மறுநாள் காலையில் அவர்களைக் கரையிலிருப்பவர் கண்டு கரைக்கு இட்டுக்கொண்டுபோனார்கள்.

இவ்விதமாய்ப் பதார்த்தங்களின் இயற்கையை அறிந்திருந்ததில், இரண்டுதடவைகளில் அநேகர்க்கு உயிர்தப்பினதைத் தெரி

வித்தோம். இன்னும் நூல்களைப் படித்துப்பார்த்தால் இப்படிப் பற்பல சமயங்களில் இந்த அறிவைக்கொண்டு மனிதர் துன்பங்களினின்றும் தப்பித்துக்கொண்டது தெரியவரும்.

## மனிதர்களை அடிமையாக விலைக்குவாங்கி விற்பதின் கோரங்கள்.

சீமையிலிருக்கிற "House of Commons" என்னும் பெயருடைய சபையார் முன்னிலையில் (Horace Waller) ஹாரெஸ் வாலர் என்கிற பாதிரியார், மேற்கண்ட வாணிபத்தொழிலின் விஷயமான சாட்சியத்தில், அந்த வியாபாரம் நடத்தப்பட்ட அமெரிக்காநாட்டின் கிழக்கோரங்களில் நடக்கிற மகா கோரமான சங்கதிகள் வெளியாயிருக்கிறதுகள். அடிமைக்காரரை விலைக்கு வாங்கும் தொழிலையுடையவன் சாதாரணமாய்ச் செய்வதென்னவென்றால், ஒரு கிராமத்துக்குப் போய் அந்தக் கிராமத்துக்குத் தலைவனாயிருப்பவனைக் கண்டு, அவனுக்குச் சாராயங்களும் துப்பாக்கிகளும் இனாமாகக் கொடுக்கிறான். அந்தச் சாராயத்தை அவன் குடித்துப் புத்திமயக்கமாயிருக்கிறகாலத்தில், தனக்கு இத்தனை அடிமைக்காரர் வேண்டுமென்று வந்தவன் பேரஞ்செய்கிறான். அவ்வளவும் தன்னுடைய கிராமத்திலில்லாமையால், கிராமத்தலைவன் தனக்கு அடுத்த கிராமாதிகாரிகளுக்குள் யார்மேல் தனக்குப் பகையிருக்கிறதோ, அவன்மேல் அந்த மயக்கமான தசையிலேயே போய்ப் போர்செய்கிறான். இவனிடத்தில் இருக்கிற துப்பாக்கி முதலானதுகளால் எதிரி வெகு சீக்கிரத்தில் அடக்கப்பட்டு, வெற்றிபொருந்திய பகைவனுக்குத் தன்னுடைய ஊர் மனிதர்களை விற்கும்படி நேரிடுகிறது. இது மிகவும் குறைந்த விலைக்கு வருகிறபடியினாலே, முதலில் வந்த அடிமைவர்த்தகன் வெகு உற்சாகத்தோடு அந்த அடிமைக்காரர்கள் எல்லோரையும் விலைக்கு வாங்கிவிடுகிறான். அந்த இடத்தினின்றும் போகும்போது நடுவழியில் இந்த ஆடுமாடுகளின் மந்தையானது சிறிதுசிறிதாய் அழிந்துபோகிறது எப்படியென்றால், வியாதியுண்

டாவதினாலும், போதுமான உணவு அகப்படாதவிடங்களின் வழியாய்ப் போகும்படி நேரிடுவதினாலும், கருப்பினாலும் அநேகர் இறந்துபோகிறார்கள். மேலும் இந்த அடிமைக் கூட்டத்தில் யாராவது எதிர்த்தால், அவர் விஷயத்தில் கத்தியும் கோடாலியும் எவ்வளவும் தடையில்லாமல் உபயோகப்படுத்தப்படுகிறதுகள். இவ்வாறு ஒரு பெருங்கொலை உண்டாய்விடுகிறது. ஒருநாள் காலையில் இந்தச் சாட்சியம் சொல்லுகிற பாதிரியார் 84 பேருள்ள ஒரு அடிமைக்கூட்டத்தை அடிமையினின்றும் விடுவித்தார். அவர் எந்த இடத்தில் இந்த விடுதலை செய்தாரோ அதற்கு அதிசமீபமான மற்றோரிடத்தில் போகும்போது, அங்கே வேலிகளில் அன்றையதினம் காலையே அடிமைக்காரர்களைக் கொன்றவிடங்கள் காட்டப்பட்டதுகள். அங்கே வந்தவர்களில் புதிதாய்ப் பிரசவித்த ஒரு பெண்பிள்ளையானவள் அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு நடக்கமாட்டாமல் ஒரு இடத்தில் நின்றாள். அதைப்பார்த்து அந்த அடிமைவியாபாரியானவன் அந்தக் குழந்தையைக் கால் பெருவிரலுக்கும் அதையடுத்த விரலுக்கும் நடுவில் பிடித்து இழுத்து ஒரு மரத்தின்மேல் எறிந்தான். அந்தக் குழந்தை தலைமுறிந்து உடல் வெவ்வேறாய்ப்போய் இறந்துபோய் விட்டது. மற்றொரு பெண்பிள்ளையானவள் தானே நடக்கச் சக்தியற்றவளாய் நின்றாள். அந்த வியாபாரி அதைக்கண்டு, கோடாலியினால் அவள் தலையைப் பிளந்து அடிமைப் பிணையலினின்றும் அவளை அறுத்து நீக்கிவிட்டான். அடிமைக்காரரையெல்லாம் ஒன்றாய்க் கயிற்றினால் பிணையல்செய்துகொண்டுபோகிறார்கள். சிறுபிள்ளைகளுக்கு மிகவும் கனமான நுகத்தடிகளைக் கழுத்தில் மாட்டி வரிசையாகப் பிணைத்துக்கொண்டுபோவார்கள். இப்படி அவர்களை விலைக்கு வாங்கினதுமுதல் கப்பல்காரர்களிடத்தில் சேர்ப்பிக்கிறவரையில் கொண்டுபோவார்கள். இது சில சமயங்களில் ஒண்ணைமாசஞ்செல்லும்; சில சமயங்களில் மூன்றுமாசமுமிருக்கும்.

———»»««———

## ஒரு புலவருக்கும் அவருடைய நண்பர் ஒருவருக்கும் நடந்த சம்பாஷணை.

---

புலவர், நண்பருக்குச் சொல்லியது:

*நீர் அறிந்த மனிதர்களுள் சிறந்த வல்லமையையுடையவர்களாயும், அதுபற்றி உம்மால் ஆச்சரியப்படத்தக்கவர்களாயும் யாராவது இருக்கிறார்களா?*

நண்பர், புலவருக்குச் சொல்லியது:

*பலபேர் இருக்கிறார்கள்.*

புல. *அவர்களில் சிலரைச் சொல்லும் பார்ப்போம்?*

நண். *ஹோமர், மிலாஸிப்பிடீஸ், ஸாபொக்ளீஸ், பாலிக்ளிடீஸ், ஜீயூக்ஸீஸ், இப்படி அநேகர் சிறந்த வல்லமையினால் என்னுடைய ஆச்சரியத்துக்கும் மதிப்புக்கும் பாத்திரர்களாயிருக்கிறார்கள்.*

புல. *இவர்களுக்குள் பாலிக்ளிடீஸ் என்பவனை எதனத்துக்காக நீர் மதிக்கிறீர்?*

நண். *அவன் பதுமைகள் செய்வதில் விசேஷ வல்லமையுடானவனானதால் அவனை மதிக்கிறேன்.*

புல. *பதுமைகள் செதுக்குவதில் வல்லமையுள்ளவனாயிருப்பதைப்பற்றி பாலிக்ளிடீஸ் என்பவனிடத்தில் நீர் எப்படி கௌரவபுத்தி வைத்திருப்பதாய்ச் சொல்லுகிறீர்; நல்லது, அவனால் செய்யப்படும் பதுமைகளுக்கு கை கால் முதலிய உறுப்புகள் இருந்தபோதிலும், அவைகளுக்கு இந்த உறுப்புகளை அசைக்கவாவது, இருந்தவிடத்தைவிட்டுத் தாமே மற்றொரு இடத்துக்குப் போகவாவது, அல்லது தங்களைச் சுற்றிலும் நடந்துகொண்டிருக்கிற காரியங்கள் இன்னதுகளென்று அறிந்துகொள்ளவாவது வல்லமையும் புத்தியுங் கிடையாதே. இந்தப் பதுமைகள் செதுக்குபவனையும், இவைகளைப்போல கை கால் முதலிய உறுப்புகளுண்டாயிருப்பதுமல்லாமல், அதுகளைத் தாமே அசைக்கவும், அதுகளைக்கொண்டு தொழில் நடத்தவும், இத்துடன், சுற்றிலும் நடக்கிற*

காரியங்கள் இன்னவென்று அறிந்துகொள்ளவும் வல்லமையும் புத்தியுமுடைய மனிதன், ஆடுமாடு முதலான ஜந்துக்களை உண்டு பண்ணும் சிற்பியையும் பார்த்தால், இவ்விருவரில் யாருடைய வல்லமையைச் சிறந்ததாக நினைப்பீர்? யாரை மிகுந்த ஆச்சரியத்துக்குப் பாத்திரனாக நினைப்பீர்?

நண். மனிதர் முதலானவர்களை உண்டுபண்ணும் சிற்பியையே சிறந்தவனாகக்கொள்ளுவேன் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் இந்த உயிர்களை உண்டுபண்ணுவதில், அவன், இன்னகாரியத்தைவிட இன்னகாரியஞ்செய்தல் நன்மை என்னும் தூக்கிவினை செய்வதாகிய புத்தியையும், இன்ன உபாயத்தால் இன்னகாரியம் முடியுமென்கிற பகுத்தறிவையும் செலுத்தி, அவனுடைய புத்தியுக்திகளினாலேயே இந்த ஜந்துக்களை உண்டாக்கியிருப்பதாய்த் தெரியவந்தால்மாத்திரம் அவனிடத்தில் நான் ஒரு மகிமையை நினைப்பேனேதவிர, புழு துளைத்துக்கொண்டே போகும்போது எழுத்துப்போலவும், ஒரு துளை விழுந்தால் அது எழுத்தாயிருந்தாலும், அந்தப் புழு எழுத்து எழுதினதாக அதற்குப் பெருமைகூறக் கூடாதுபோல, யாதொரு வகையும் முன்யோசனையும் இல்லாமலே அவன் வேலை நடத்திக்கொண்டிருக்கும்போது இந்த உடம்புகள் தமக்குத்தாமே அமைந்ததாகத் தெரியவந்தால், அப்போது அவனுடைய வல்லமையையும் புத்தியையும் அவ்வளவாய் ஆச்சரியப்படத்தக்கதுகளென்று நான் கொள்ளமாட்டேன்.

புல. ஆனால் உலகத்திலுள்ள பதார்த்தங்களுள் அநேகம் இன்னின்ன உபயோகத்துக்காக உண்டாக்கப்பட்டிருக்கிறதென்று நாம் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடுமாயிருக்கின்றன; இது இன்னின்னதற்காக உண்டாக்கப்பட்டது என்பதைச் சொல்லக்கூடவில்லை. இந்த இருவகைப் பதார்த்தங்களில் சிறந்த புத்தியின் பயனாக எதை நினைப்பீர்?

நண். எந்தப் பதார்த்தங்களுடைய பயன்படுந்தன்மையானது வெளிப்படையாய்த் தெரிந்திருக்கிறதோ, அதுகளையே மேற்சொன்ன புத்தியுக்திகளின் பயனாகக் கொள்வதுதான் யுக்திக்கொத்ததாகக் காண்கிறது.

புல. ஆனால் நான் சொல்வதைக் கவனமாய்க் கேளும்: யார் முதலில் மனிதனை உண்டுபண்ணினானோ, அவனே இவனுக்குப்

பார்வைக்கு விஷயமாகும்படியான வஸ்துக்களைப் பார்ப்பதற்குக் கண்ணையும், கேள்விக்கு விஷயமாகுமதையெல்லாம் கேட்பதற்குக் காதையும் கொடுத்தார் என்பதும், இந்தக் கண் காது முதலியவற்றை மனிதனுக்கு இவைகளால் நன்மையுண்டாகுமென்கிற கருத்தினாலே கொடுத்தார் என்பதும் வெளிப்படையாகவே தெளிவாய் ஏற்படுகிறதல்லவா? இப்போது பூ முதலியவற்றிற்கு மணத்தை உண்டுபண்ணி, அந்த மணத்தை உணரும்படியாய் மனிதனுக்கு மூக்கை உண்டாக்காமற்போனால் அந்த மணத்தை உண்டுபண்ணினதில் என்ன பயன்? இன்ன பதார்த்தம் தித்திப்பென்றும், இன்னது கைப்பென்றும், இன்னது இனிப்பாயிருக்கிறதென்றும், இன்னது இனிப்பற்றிருக்கிறதென்றும் அறிந்து, அதுகளின் வேற்றுமை இன்னதென்று நிச்சயஞ்செய்வதற்கு ஒரு நாவை உண்டுபண்ணி அதைத் தகுந்தவிடத்தில் வைக்காமற்போனால் சில பதார்த்தங்களை மதுரமாயும், சிலவற்றைக் கைப்பாயும் உண்டுபண்ணினதில் என்ன பயன்? இதுவுமல்லாமல் மனிதனுடைய கண்ணானது மிகவும் மிருதுவாயிருப்பதுபற்றி, அதற்குத் தீங்குநேரிடாமல் காக்கிறநிமித்தம் வேண்டும்போது தமக்குத்தாமே விரியும்படியாயும், தூக்கம் வருங்காலத்தில் கண்முழுதையும் மூடிக்கொள்ளும்படியாயும் கண்ணிமைகளை ஏற்படுத்தினதி[illegible] மற்ற விஷயங்களிலெல்லாம்விட அந்தச் சிற்பியினுடைய வ[illegible]லமையும், பின் வேண்டியதற்காக முந்தி ஏற்பாடு செய்தலாகி[illegible] குணமும் மிகத்தெளிவாய் ஏற்படுகிறதல்லவா? இத்தோடு [illegible]தக் கண்களில் காற்றுப்படாமல் தடுக்கவும், கண்ணைக் காக்கவு[illegible] இந்தப் புருவங்களின் ஓரத்தில் ஒரு வேலி நட்டு இருக்கி[illegible]லவா? கண்ணிமைக்குமேலே இருக்கிற புருவத்துக்கும் அதற்[illegible]கென்று ஒரு தொழில் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் புருவ[illegible] இல்லாமற்போனால் நெற்றியிலிருந்து விழுகிற வேர்வையானது[illegible] கண்ணின்மேல் இறங்கிப் பார்வைக்கு வருத்தத்தைத் தரும்[illegible] அப்படி நேரிடவொட்டாமல் இந்தப் புருவமானது சார்புப் பந்தலைப்போல அந்த வேர்வையை வேறுவழியாய்த் திருப்பிவிடுகிறதல்லவா? மேலும் நம்முடைய காதுகள் ஒவ்வொருவித ஓசையையும் உணரவல்லதுகளாயிருக்க, அப்படி இருந்தபோதிலும் பல ஓசைகள் ஒன்றாய்க்கூடி ஒன்றற்கொன்று வேற்றுமை அறியக்கூடாதவிதமாய் காதை நிறைத்துவிடாமல் செய்தி

ருப்பதும் ஒரு ஆச்சரியமல்லவா? ஒரு ஜந்துவினுடைய முன்
பல், கடைவாய்ப்பல் ஆகிய இருவகைப்பற்களில் முன்பற்களை
பதார்த்தங்களைக் கடித்துத் துண்டாக்கத்தக்கதுகளாயும், கடை
வாய்ப்பற்களை பண்டங்களை மென்று மாவாக்கும்படியாயும் ஏற்
படுத்தினதும், வாய்வழியாய்ச் செல்லவேண்டிய உணவில் உண்
ணத்தகாத பதார்த்தங்கள் உண்பவனுக்குத் தெரியாமல் கலந்து
உள்ளே போகவொட்டாது தடுக்கிறநிமித்தம் அந்த வாயைக் கா
ணுங் கருவியாயிருக்கிற கண்ணுக்கும், வாசனையையறியும் கரு
வியாயிருக்கிற மூக்குக்கும் அடுத்தாப்போல வைத்திருப்பதும்,
பல் வாய் முதலியவற்றை இப்படியமைத்து, இந்தக் கண் முதலிய
வற்றிற்கு அருவருப்பைத் தரும்படியான உறுப்புகளையெல்லாம்
அதுகளினின்றும் நெடுந்தூரத்தில் அதுகள் உணரக்கூடாதவிடத்
தில் வைத்திருப்பதும் ஆச்சரியமல்லவா? இதையெல்லாம் பார்த்
தும், இந்த அவயவங்களெல்லாம் வேறொரு கருத்தாவில்லாமல்
அங்கேயங்கே தாமாய் அமைந்துக்கொண்டதுகளென்றும், அல்லது
அவைகளினின்றும் வேறான ஒரு கருத்தாவினுடைய புத்தியினு
லும் உபாயத்தினுலும் அப்படி அமைக்கப்பட்டதுகளென்றும்
உமக்குத் தெளிவாய் ஏற்படவில்லையா? அதில் இன்னுங்கூடச் சந்
தேகமிருக்கலாமா?

நண். எனக்கு இதற்குமுன்னிருந்த சந்தேகமெல்லாம் நீங்
கிப்போய்விட்டது; இனி யாதொரு சந்தேகமுமில்லை. இதுவன்றி
இதை நான் யோசிக்க யோசிக்க இந்த மனிதனென்கிற பதார்த்த
மானது ஒரு சிறந்த சிற்பியினுடைய வேலையென்றும், அவனுடைய
வேலைவேலைக்குளெல்லாம் சிறந்த வேலையென்றும் எனக்குத் தெளி
வாகிக்கொண்டுவருவதுமல்லாமல், இந்தப் பதார்த்தத்தைப் பார்க்
கும்போது அந்தச் சிற்பியானவன் விசேஷ அன்பும் விசுவாசமும்
உண்டானவனென்பதற்கு அளவிறந்த குறிகளும் அதில் தென்
படுகிறதுகள்.

புல. மனிதனுக்குள் அந்த ஜாதி விருத்தியாய்க்கொண்டு வரு
வதற்குக் காரணமான ஒரு ஆசையும், குழந்தையுண்டானபின்பு
அது காக்கப்படுவதற்கு இன்றியமையாததாய் அதன்மேல் அதன்
தாய்க்குத் தோற்றுகிற ஒரு அன்பும், மனத்தளர்ச்சியும், மேலும்
நாம் எல்லாம் இந்த உலகத்தில் தோன்றின நிமிஷம்முதல் நம்மு
டைய மனத்தைச் சுவாதீனஞ்செய்துகொண்டிருக்கிற உயிராசை

யும், தேகத்தின் அழிவை நினைக்கும்போது தோற்றுகிற ஒரு பயமும் இவைகளெல்லாம் நமக்குள் இருந்துகொண்டிருக்கிறதுகளே; இதைக்குறித்து நீர் என்ன நினைக்கிறீர்?

நண். இந்தத் தோற்றங்களெல்லாம் மேலே சொன்ன மகா சிற்பியானவன் தான் ஒருதரம் உண்டுபண்ணினது, என்றும் நிலையாயிருக்கவேண்டுமென்கிற விருப்பத்தினுல் அவனே யோசனையின்மேல் உண்டுபண்ணினதுகளென்றும், ஆகையினுலே இதுகள் சர்வத்தும் அவனுடைய யோசனையின் பயனுகிய ஒழுங்குக்கு உட்பட்டதுகளென்றும் எனக்குத் தோற்றுகிறது.

புல. இதுவுமல்லாமல் உமக்குள்ளேயே நீ தேடிப்பார்த்தால் Reason என்றும், அறிவு என்றும் சொல்லப்பட்ட ஒரு பொருள் இருக்கிறதல்லவா? அந்தவிதமான பொருள் உமக்கு வெளியில் எங்கும் இல்லையென்று நினைக்கிறீரா? மண், நீர், நெருப்பு, காற்று முதலான அஞ்சுபூதங்களில் உமக்குச் சுற்றிலும் உம்முடைய கண்ணுக்கு அகப்படுகிற பூமியில் எவ்வளவோ சிறிய பாகத்தைக்கொண்டு உம்முடைய உடலை உண்டுபண்ணியிருக்கிறது. உம்முடைய உடம்பில் இருக்கிற ஈரமும் அப்படியே நம்மைச் சுற்றிலும் உள்ள நீர்வெள்ளத்தில் நாம் பார்க்கிற கடலே ஒரு சிறியபாகமாகவிருக்கிறது. அப்படிப்பட்ட ஜலத்தில் எவ்வளவோ சிறியபாகம் உம்முடைய உடம்பில் இருக்கிற ஈரமாகவிருக்கிறது. இப்படியே மற்ற ஆகாசம் முதலான பூதங்களின் மிகவும் சிறியபாகங்களால் உம்முடைய தேகம் அமைந்திருக்கிறது. இப்படி உம்முடைய தேகம் யாவத்துக்கும் அதற்கு வெளியிலிருக்கிற மண், நீர், நெருப்பு முதலியவற்றை உபாதானகாரணமாகக்கொண்டு அதற்கு ஒரு ஆதிசொல்லக் கூடுமாயிருக்கிறது. நீர் சொல்லுகிறபடி உம்முடைய மனத்துக்கு வெளியில் எவ்விடத்திலும் புத்தியென்பது இல்லாமற்போனுல், உம்முடைய ஆத்துமா மாத்திரம் ஆகஸ்மீகமாய் யாதொரு காரணமும் இல்லாமல் வந்ததாயிருக்கவேண்டும். இதனுல் என்ன ஏற்படுகிறதென்றுல், நம்முடைய கண்ணுக்குத்தெரிகிற அண்டமுழுதும், அதற்குட்பட்ட எண்ணிக்கைக்கடங்காத கோளங்களும், அவைகளின் உபயோகம் எப்படிப்பட்டதாயிருந்தபோதிலும், அவைகளின் ஓட்டத்தின் ஒழுங்கு எப்படிப்பட்டதாயிருந்தபோதிலும் இப்படிப் பார்ப்ப

வர் திகைத்து நின்றுபோகும்படியான அண்டமுழுதும் ஆகஸ்மீகமாய் உண்டானதுகளென்றும், இதுகள் ஒரு புத்தியினுடைய செயலல்லவென்றும் ஒத்துக்கொள்ளவேண்டியதாய் நேரிடுகிறது.

நண். வேறுவிதமாய் நினைப்பது வருத்தமாயிருக்கிறது எப்படியென்றால், இவ்விடத்தில் சிற்பியானவன் பதுமையைச் செய்யும்பாது பார்த்திருக்கிறேன்; தாங்கள் சொல்லுகிற தேவன் இந்த அண்டங்களை எதையாகிலும் உண்டுபண்ணும்போதாவது, அதன் தொழிலை நடத்தும்போதாவது நான் கண்ணால் கண்டதில்லை.

புல. அப்படியே உம்முடைய ஆத்துமாவையும் நீர் கண்ணால் கண்டதில்லை. நீர் சொல்வதை ஒப்புக்கொண்டால் உம்முடைய கைகால்கள் மூலமாய் நடக்கும் தொழில்களும், உமக்குள்ளிருக்கும் ஆத்துமாவினுடைய புத்தியுக்திகள் காரணமாக நடப்பதுகளல்லவென்றும், ஒரு மனத்தினுடைய ஆவசியகமேயில்லாமல் ஆகஸ்மீகமாகவே இதுகள் நடத்தப்படுகிறதுகளென்றும் ஒப்புக்கொள்ளவேண்டியது. ஆனால் ஆத்துமா ஒன்றிருக்கிறதென்பதிலும், அதுதான் தேகத்தைக்கொண்டு தொழில்நடத்துகிறதென்பதிலும் சந்தேகந்தோற்றவில்லையே?

நண். தேவனை நான் இகழ்ந்ததாக நீர் நினைக்கவேண்டாம். அவனை இகழ்வதத்தனைபோக, அவன் மகா சிறந்தவனென்றும், அதனால் அவனுக்கு நான் ஒரு அவசியமான பொருளல்லவென்றும், என்னுடைய தொழிலினாலும் அவருக்கு ஆகவேண்டியகாரியம் ஒன்றும் இல்லையென்றும் நினைக்கிறேன்.

புல. நீர் இந்த விஷயத்தில் பிழையான கருத்துக்கொண்டு இருக்கிறீர். அவர் உம்முடைய விஷயத்தில் வைத்த ஞாபகம் எவ்வளவு பெருமையுள்ளதாகவிருக்கிறதோ அவ்வளவுக்குத் தக்கதாக அவரைக் கனப்படுத்துவதும், அவருக்குப் பணிவிடைசெய்வதும் உம்முடைய கடமையாகவிருக்கிறது.

நண். மனிதன் விஷயத்தில் தேவன் விடாமல் ஞாபகம் வைத்திருப்பதாகத் திருப்திகரமாய் எனக்கு யாராவது தெரிவித்தால், அவரை நோக்கி நான் செலுத்தவேண்டிய கடமையைத் தெரிவிக்க எனக்கு ஒரு ஆசான் வேண்டியதில்லை.

(இன்னும் வரும்.)

## ஒரு யுக்தியான தீர்மானம்.

ஒரு சத்திரத்தில் இரண்டுபேர் சாப்பாட்டுக்கு உட்கார்ந்தார்கள். ஒருவனிடத்தில் ஐந்தப்பமும், மற்றொருவனிடத்தில் மூன்றப்பமும் இருந்தது. இவர்கள் உண்கிறதற்குமுன்னமே மற்றொரு வழிப்போக்கன் அவ்விடத்தில் வந்து இவர்களுடைய உணவில் தனக்கும் சிறிது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அப்படியே அவர்கள் ஒப்புக்கொண்டு அந்த அப்பங்கள் எல்லாவற்றையும் அந்த மூவருமாய் உண்டுவிட்டார்கள். பின்பு, புதிதாய்வந்த வழிப்போக்கன் தன் பங்குக்காக எட்டுபணம் மற்ற இருவரிடத்திலும் வைத்துவிட்டுப் போய்விட்டான். ஐந்தப்பக்காரன் ஐந்துபணத்தைத் தானெடுத்துக்கொண்டு, மூன்றுபணத்தை மூன்றப்பக்காரனுக்குக் கொடுக்கப்போனான். அவன் அதை வாங்கமாட்டோமென்றும், தனக்கு எட்டுபணத்தில் பாதி நாலுபணம் வரவேண்டுமென்றும் வாதித்தான்.

இருவரும் நியாயாதிபதியினிடத்திற் போய்ச் சொல்லிக்கொண்டதில், அவர் செய்த தீர்மானமாவது: எட்டு அப்பத்தை மூவரும் சமமாய் உண்டபடியினாலே ஒவ்வொரு அப்பத்தில் ஒவ்வொருவன் மூன்றில் ஒருபங்கு எடுத்துக்கொண்டதாகிறது. இப்படி ஒவ்வொன்றையும் மும்மூன்றாகப் பிரிக்கும்போது, எட்டப்பங்களும் இருபத்தினாலு துண்டாகி, அதுகளில் ஐந்தப்பக்காரனிடத்தில் பதினைந்து துண்டுகளும், மூன்றப்பக்காரனிடத்தில் ஒன்பது துண்டுகளும் நிற்கிறதுமல்லாமல், மூவரில் ஒவ்வொருவனும் மொத்தத்தில் எட்டுதுண்டுகள் உண்டதாகிறது; ஆகையினாலே ஐந்தப்பக்காரனுடைய துண்டுகள் ஏழும், மூன்றப்பக்காரனுடைய துண்டு ஒன்றும் புதிய வழிப்போக்கனுக்குச் சேர்ந்ததாகிறது. அதனால், அவன் கொடுத்த எட்டுபணத்தில், ஐந்தப்பக்காரன் ஏழுபணமும், மூன்றப்பக்காரன் ஒருபணமும் எடுத்துக்கொள்ளவேண்டியது என்று தீர்மானஞ்செய்தான்.

## அந்தகரைப்பற்றியது.

[illegible]ர்களைப் பார்த்து நாமெல்லாரும் சாதாரணமாய்ப் பச்[illegible]படுகிறோமல்லவா? இவ்வாறு பரிதாபப்படுகிறதற்குக் [illegible] இன்னதென்று சற்றே பரிசோதித்துப் பார்ப்போமாக: [illegible]டைய நாம் நம்முடைய வீடுகளில் போஜனாதிகாலங்க[illegible] [illegible]ரணமாய் நடக்கும் சம்பாஷணைகளும் விநோதங்களும் இத்[illegible]மையுடையனவென்று கொஞ்சம் யோசிப்போம். நேத்திரதிருஷ்டி இல்லாவிடில் விஷயங்களில் சொரூபஞானம் லவலேசமும் உண்டாகமாட்டாது. நேத்திரத்தினாலல்லவா நாம் பதார்த்தசொரூபத்தை இயல்பாகத் தெரிந்துகொண்டதுபோலவே அலக்ஷியமாகப் பேசுகிறோம். இந்த நேத்திரேந்திரியம் இல்லாமற்போவது எவ்வளவு துர்ப்பாக்கியம்! தேஜோமயமான சூரியன், பளிச்சு பளிச்சென்று மின்னுகின்ற நக்ஷத்திரங்கள், மனோகரமான புஷ்பங்கள், வசந்தகாலத்திற்றோன்றுகிற மலர்ச்சி, கோடைகாலத்திலுள்ள பிரகாசம், நாநாவித விருட்சங்கள்தோறும் பழுக்கின்ற சிறந்த கனிகள்முதலான அற்புதங்களைக்குறித்து நாம் களிப்புடன் சம்பாஷித்துக்கொண்டிருக்க, ஐயோ! இந்தப் பிறவிக்குருடருக்கு அந்சவிஷயங்களில் ஒன்றேனும் என்ன விளங்கப்போகின்றது. இவர்கள் துயரத்தை எவ்வளவென்று சொல்லக்கூடும்.

இப்படிப்பட்ட அந்தகர்களுக்கு உலகத்திலுள்ள வஸ்துஞானமில்லாவிடினும், கடவுளுடைய கிருபையால் அகக்கண் திறந்து, திவ்ய சரித்திரங்களைக் கேட்டு, ஆத்மாநந்தம் பெற்று கடைசியில் பிரமாநந்தமும் அடைவார்கள்.

இவ்வித கண்ணிலாத கபோதிகளைக் காக்கும்பொருட்டு அந்தகசாலைகளென்று இங்கிலாண்டுதேசத்தில் சில தர்மசத்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அந்தகசாலைகளில் இவர்களுக்கு ஆடை உணவுகளில் சம்ரக்ஷணைசெய்துவருவதுமல்லாமல், பரிசஉணர்ச்சியால் அக்ஷரஞானமும் உண்டாகும்படி சில புத்தகங்கள் அபூர்வமாகக் கல்பித்து, அவைகளின்மூலமாய் நல்ல கிரந்தங்களைப் பயில்வித்து வருகிறார்கள். இவ்வுலகில் இதற்குமேலான தருமம் வேறு என்னவிருக்கின்றது.

—— ⊳⊳⊲⊲ ——

## சமாசாரம்.

மின்தபாற்கூலிவிகிதம் எறியது.—கவர்னர் [illegible] இப்பொழுது செல்லும் மின்தபாற்கூலி விகி[illegible] திருத்தி வரையறுத்த பின்வரும் நூதன விகித [illegible] ஜனுவரிமாசாரம்பந்தொட்டு நடக்கிறதாம். இந்தியா[illegible] தானிய பிரமதேசத்திலேனும் ஓரிடத்திலின்று [illegible] அங்கிலேயபாஷையில் சாதாரண நடையாகக் [illegible] செய்வதற்குக் கூலிவிகிதம், ஆறு சொல்லுக்கு ஒரு ரூபாய். [illegible] குக் குறையினும் அதே விகிதமாம். வக்கணைக்குக் கூலியில்லை. கூட விபியிலாவது, மறைபொருட் சொற்றொடரிலாவது, அந்நிய பாஷையிலாவது எழுதும் கடிதத்திற்குத் தபாற்கூலி விகிதம், மொழி ஆறுக்கு ரூபாய் இரண்டு. ஆறுக்குக் குறையினும் அதே விகிதம். வக்கணைக்குக் கூலியில்லை. கடிதம் எழுதும் இடப்பெயர், கடிதம் போக்கும் இடப்பெயர், எழுதுவோன் பெயர், அவன் வக்கணை இத்தனைக்கும் தபாற்கூலியில்லை.

---

(The Prince of Wales) அங்கிலேயதேசத்து இளவரசர்.—நமது காருண்ய விக்டோரியா ராஜாத்தி அவர்களுடைய சிரேஷ்ட புத்திரராகிய உவெல்ஸ் தேசத்துப் பிரபு ஆல்பர்ட் எட்வார்ட் என்பவர் ஓர்வித கெட்ட சுரத்தினால் வருந்துகிறதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் விசனப்படுகிறார்கள். அவர் சில தினங்களுக்குமுன் வெகு மோசமான நிலையிலிருந்தாரென்றும், அவர் பிழைப்பது சந்தேகமாயிருந்ததென்றும் மின்தபால் சமாசாரம் வந்தது. இப்பொழுது சற்று குணப்பட்டுவருகிறாராம். இந்த ராஜப்பிரபு யாதொரு விக்கினமுமின்றி சீக்கிரம் சுகமடையவேண்டுமென்று கோருகிறோம்.

---

(The Weather) கால இயற்கை.—சென்னையைச்சேர்ந்த அநேக இடங்களில் சென்ற மாதத்தில் அதிக மழைபெய்தது. ஆறுகள், ஏரிகள், குளங்கள் யாவும் நிரம்பி, எங்கேபார்த்தாலும் பசுமையாயும் செழிப்பாயும் இருக்கிறது. ஆனால் வடக்கேயுள்ள நாடுகளில் மழைத்தாட்சியினால் அகவிலை அதிகப்பட்டிருப்பதாகக் கேள்வி. பார்ஸ்தேசத்தில் இப்போது கடும் பஞ்சமுண்டாயிருக்கிறதாம்.